★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/89/5/78

மலர்: 21 மாசி 29 ரபி-ஆ இதழ் 31
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 13-3-79

RECEIVED PERIODICALS DIVISION LIBRARY ★ CAMPUS

★ கச்சதீவு சம்பவங்கள்

## 25ஆயிரம் யாத்திரிகர்களில் இந்தியர் தொகை 20,000

[வண்ணார்பண்ணை]

கச்சதீவில் இம்முறை இந்திய யாத்திரிகர்களே அதிகமாகக் காணப்பட்டனர். சுமார் 25,000 யாத்திரிகர்களையே இம்முறை கச்சதீவில் காணக்கூடியதாக இருந்தது. இவர்களில் 20,000 பேர் இந்தியர்களாகவே காணப்பட்டனர்.

சனிக்கிழமை காலைவரை சுமார் 10,000 யாத்திரிகர்கள் இராமேஸ்வரத்திலிருந்து கச்சதீவு புறப்பட்டதாக இராமேஸ்வரம் சுங்கக் கலக்டர் தெரிவித்தார். இலங்கைப் பிரதம சுங்கக் கலக்டர் எஸ். பி. திசநாயக்கா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னன்டோ, பதில்நீதிபதி திரு. எஸ். கனகரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் தர்மபாலன், அரசாங்க செயலக உதவியாளர் திரு. சபாரத்தினம். அரசாங்க அதிபர் அலுவலக உதவியாளர் திரு எஸ் சண்முகம் உட்பட பலர் சனிக்கிழமை காலை கச்சதீவு வந்திருந்தனர். யாழ் மாவட்டப் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் திரு என் சண்முகசுந்தரம் தொடர்ந்து 5 தினங்களாக கச்சதீவில் அரசாங்க நிர்வாக கடமைகளில் ஈடுபட்டிருந்தார்.

கச்சதீவில் ஜனசமுத்திரம் நிறைந்திருந்ததால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. தாகத்தால் கஷ்டமடைந்த பலர் மயங்கிய நிலையில் காணப்பட்டனர். பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு சண்முகசுந்தரம் இவரது உதவியாளர் திரு எஸ் சந்தசாமி, கச்சதீவிற்கு விசேட கடமைக்காக அழைக்கப்பட்டிருந்த கிராமசேவையாளர் திரு என் கணபதிப்பிள்ளை ஆகியோர் அரசாங்க ஒதுக்கீட்டில் இருந்து தமது பாவிப்பைக் குறைத்து இயன்றளவு தண்ணீர் வழங்கி தாகத்தால் துன்புற்றோர்களின் கஷ்டங்களை நீக்க நடவடிக்கை எடுத்தனர்.

இராமேஸ்வரம் சுங்க கலக்டர் திரு பி ஆர் சுப்பிரமணியமும் சில அதிகாரிகளும் சனிக்கிழமை இங்கு வந்திருந்தனர். சுமார் 15000 ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை சுங்கப் பகுதியினர் கைப்பற்றினர். சோப் சோப்வகைகள், தேங்காய் எண்ணெய்ப் போத்தல்கள், லக்ஸ்பிறே, கணக்குப் பார்க்கும் இயந்திரம், தேமா பிளாஸ்க் போன்றவை இக் கடத்தல் பொருட்களில் அடங்கியிருந்தன. சுங்க உத்தியோகத்தர் திரு ஏ கேதாகரநாதன், திரு பவளராசா ஆகியோர் இங்கு

(5-ம பக்கம் பார்க்க)

# மீண்டும் சீன-வியட்நாம் எல்லையில் கடும் யுத்தம்!

## கடற்படை அணியை அமெரிக்கா அனுப்புகிறது

லண்டன், மார்ச், 12

**சீன-வியட்நாம் எல்லையில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்துள்ளது. வியட்நாமின் வடகிழக்குப் பகுதியில் சீன, பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருவதாக யுத்த முனைகளிலிருந்து கடைசியாகக் கிடைக்கப் பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.**

வியட்நாமிய எல்லைக்குள் சீன இன்று திடீரெனத் தாக்குதல்களை ஆரம்பித்திருக்கும் அதேநேரத்தில்; மற்றும் சில (முன்னர் கைப்பற்றப்பட்ட) பகுதிகளிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் சீனப்படைகள் மீது வியட்நாமியத் துருப்புகள் கடுமையாகத் தாக்குதல்கள் நடத்திவருகின்றன என்று ஏஜன்சி செய்திகள் தெரிவிக்கின்றன,

அமெரிக்க கடற்படை

சீன—வியட்நாம் யுத்தம் மீண்டும் இன்று ஆரம்பித்திருக்கும் அதேநேரத்தில் இந்துமகாசமுத்திரத்துக்கு தனது கடற்படை அணியொன்றை அனுப்பி வைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து இந்திய அரசு தனது கடும் எதிர்ப்பையும் கவலையையும் அமெரிக்க அரசுக்குத் தெரிவித்துள்ளது,

## அமெரிக்கா உதவி

(கொழும்பு)

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள அவசரகால நிவாரணப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காக அமெரிக்கா கொடுத்துதவியுள்ள சங்கிலி இணைக்கப்பட்ட வாள் உபகரணங்களை அமெரிக்கத் தூதுவர் திரு. டபிள்யூ. ஹவார்ட் ரிக்கின்ஸ், பிரதமர் திரு ஆர். பிரேமதாசா அவர்களிடம் கையளித்தார்.

சங்கிலி இணைக்கப்பட்ட வாள்கள், அவற்றைக் கொண்டு செல்வதற்கான பெட்டிகள், வாள்களுக்குத் தேவையான மாற்றுச் சங்கிலிகள் என்பன இந்த உபகரணங்களில் அடங்கும்.

இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்த பெருந்தெருக்கள் திணைக்களம், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஆகியன இந்த உபகரணங்களைப் பயன்படுத்த உள்ளன. [இ]

## விரிவுரைகளுக்கு தவறினால் பரீட்சை கிடையாது!

[கொழும்பு]

பல்கலைக்கழகங்களில், விரிவுரைகளுக்கு சமூகமளிக்கத் தவறும் மாணவர்கள் பற்றி அரசாங்கம் புதிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது

பல்கலைக்கழகங்களில் என்பது சதவிகித விரிவுரைகளுக்குச் சமூகமளிக்கத் தவறும் மாணவர்கள், பல்கலைக்கழக பரீட்சைகளுக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

## காங்கிரஸ் வழக்கு 28-ந் திகதி தீர்ப்பு!

[யாழ்ப்பாணம்]

தமிழ்க்காங்கிரஸ் வழக்கு தீர்ப்பு இம்மாதம் 28-ந் திகதி வழங்கப்படவிருக்கிறது

இவ்வழக்கு யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டிருக்கிறது

மனுதார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ் கதிரவேலுப்பிள்ளை சுகவீனம் காரணமாக நேற்று வராததினால் எழுத்து மூலமான சமர்ப்பணம் சமர்ப்பிக்கப்படவில்லை.

இம்மாதம் 16-ந் திகதிக்கு முன் எழுத்து மூலமான சமர்ப்பணம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது

★ இன்றுடன் நான்காவது நாள்

## ஜனுப் பரீத் நஸீர் உற்சாகமாக ஆடுகின்றார்!

### முயற்சியில் வெற்றிபெற 'அமிர்' வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

டுவிஸ்ட் நடனத்தில் புதிய உலக சாதனையை நிலைநாட்டும் முயற்சியில் யாழ் ஜின்னா மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள மேடையில் நடனமாடி வரும் ஜனுப் பரீத் நஸீர் நான்கு நாட்களாக உற்சாகமாக ஆடிக்கொண்டிருக்கிறார்

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு அ அமிர்தலிங்கம் இவரது முயற்சியில் வெற்றிபெற வாழ்த்துச்செய்தி அனுப்பியதுடன் நேரில் தாம் கலந்து கொள்ளமுடியாமைக்கு கவலை தெரிவித்துள்ளார்,

'டுவிஸ்ட்' நடனத்தில் முன்னைய உலகசாதனை வீரர் ஆழிக்குமரன் ஆனந்தனின் தந்தையார் திரு இரு ஏவேகானந்தன் நேரில் சென்று திரு ஆனந்தன் ஏற்றிய கொடியை வீரன் நஸீர் இன்னும் உயரப் பறக்கவிட வைப்பார் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' என்று வாழ்த்தியுள்ளார்

யாழ்ப்பாணத்திலுள்ள பொதுநல ஸ்தாபனங்களும் வர்த்தகர்களும் இனமத வேறுபாடின்றி சகல உதவிகளையும் செய்துவருகின்றனர், இளைஞர்கள் அவருக்கு உற்சாகமளிப்பதற்காக அவருடன் தொடர்ந்து ஆடிவருகின்றனர், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றுவருகிறது, [கொ]

# உலகத் தமிழினத்தின் தலைவா வருக!

## மதுரையில் 25 ஆயிரம் சுவரொட்டிகள்!!

### 'அமிரை' சகல கட்சித்தலைவர்களும் வரவேற்பர்

[கொழும்பு]

இம்மாதம் 15-ந் திகதி தமிழகம் செல்லும் எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கத்திற்கு சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, திருச்சி, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

'உலகத் தமிழினத்தின் தலைவரே வருக', 'ஈழத்தமிழினத்தின் தலைவரே வருக' போன்ற சுலோகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய தமிழகத்தின் முக்கிய நகரங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

மதுரையில் மட்டும் 25 ஆயிரத்துக்கும் அதிகமான சுலோகங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

15-ந் திகதி தமிழகம் செல்லும் திரு அமிர்தலிங்கத்தையும் பாரியாரையும் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன், எதிர்க்கட்சித் தலைவர் திரு மு கருணாநிதி உட்பட சர்வக்கட்சித் தலைவர்களும் வரவேற்பர். [ம-இ]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூநகரி பிரதான வீதியில், வாடியடிக்கு அண்மையில் 25 ஏக்கர் தென்னங்காணி, வயல் விற்பனைக்குண்டு. நல்ல தண்ணீர், விலை ரூபா 40,000/- விளம்பர இல: 1886 மே/பா. "ஈழநாடு", யாழ்ப்பாணம்.
1886

மிக நல்ல நிலையிலுள்ள இரண்டு ரேட்மாஸ்ரர் சைக்கிள்கள் ஒவ்வொன்றும் ரூபா 600/- பெறுமதியானவை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க; சந்திரன் இல்லம், கீரிமலைவீதி, பண்டத்தரிப்பு.
1893

3 நாட்களில் வெளிநாடு செல்ல இருப்பதால் மிகவும் நல்லநிலையில் சிசில் R80 உள்ள குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. ஷாந்தா ஜெகநாதன், இணுவில் ஆஸ்பத்திரி, தொலைபேசி : சுன்னாகம்—331
1890

### தேவை

கிழக்கிலங்கையில் [கல்முனை] பிரபல்யமான ஸ்ருடியோ ஒன்றுக்கு படம் பிடிப்பதில் தேர்ச்சி பெற்ற திறமையான டாக்றூம் பிறின்ரர் உடன் தேவை. விபரங்கள் அறிய நேரில் வரவும். M. அருளானந்தம், 50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
1882

கணிதம், விலங்கியல், உயர் வகுப்புகளுக்குக் கற்பித்தற்குரிய ஆண், பெண் ஆசிரியர்கள் உடன் தேவை. இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் விரும்பத்தக்கது. அதிபர், மகளிர்கல்லூரி, பண்டத்தரிப்பு.
1894

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டிட வேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. National Institutes 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.
1892

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate. Diploma In Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.
1891

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


"அமரர் குமாரசாமி

# சகல மக்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்

## நினைவுக் கூட்டத்தில் நீதிபதி

[சாவகச்சேரி]

"இன்றைய உலகில் அரசியல் தத்துவ ஞானிகள் மறைந்து கொண்டிருக்கிறார்கள். இது உலகிற்கு ஒரு பேரிழப்பாகும். இலங்கை வாழ் சகல மக்களுக்கும் அமரர் குமாரசாமி ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்."

சாவகச்சேரி சரஸ்வதி பூங்காவில் அமரர் குமாரசாமி நினைவுக் கூட்டத்தில் பேசிய பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அமரர் குமாரசாமி அறங்காவல் குழுத் தலைவர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் நீதிபதி. திரு. கே. ஞானச்சந்திரன் மேலும் கூறியதாவது:

"அமரர்குமாரசாமி தமிழர் முஸ்லிம், சிங்களவர் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் சமமாக வழி நடத்தினார். ஒற்றுமையை நடுக்கல்லாக வைத்து எல்லோரும் சமமாக வாழவேண்டுமென்றே நான் விரும்புகிறேன். அவரது சிலையை எத்தனை கிரமப்பட்டென்றாலும் சாவகச்சேரி நீதிமன்றவளவினுள் நிறுவியே தீரவேண்டும்.

முன்னாள் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. க. கனகரத்தினம் கூறியதாவது:

அமரர் குமாரசாமி ஒன்பது வருடங்கள் பாராளுமன்றப் பிரதிநிதியாக அங்கம் வகித்திருக்கின்றார். அவரது சிலையை இன்னும் சாவகச்சேரியில் நிறுவவில்லையேயென்று நாங்கள் வேதனையடையத் தேவையில்லை. ஏனென்றால் செம்மணியிலிருந்து துணுக்காய்வரை அவரது சேவைகள் அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன" என்றார்.

ஆசிரியர் ஆ தில்லைநாதன் பேசுகையில் அமரர் குமாரசாமியின் சிலையை 1980ம் ஆண்டு சாவகச்சேரி நீதிமன்றம் முன்பாக நிறுவ சகலரும் ஒன்றுபட்டு முயற்சிக்கவேண்டுமென்றார்.

திருவாளர்கள் க. சரவணமுத்து, மு. சுப்பிரமணியம், சு. சின்னத்தம்பி, எஸ். துரைராசா, சின்னத்தம்பி, கந்தப்பு. திருலோகசந்தர் ஆகியோரும் பேசினர். [க-அ]

கட்டுவன் முன்னாள் சார்ஜன்ட் கொலை:

# 1வது சந்தேக நபருக்கும் பிணை அனுமதி

(மாவிட்டபுரம்)

கட்டுவன் இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் கொலை குறித்து றிமாண்டிலிருந்த முதலாவது சந்தேகநபரும் பிணையில் விடப்பட்டுள்ளனர்.

கட்டுவனைச் சேர்ந்த இளைய தம்பி சின்னத்துரை அல்லது பொன்னம்பலம் என்னும் இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கடந்த மாதம் 15ம் திகதி தாக்கப்பட்டுக் கொலையுண்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் சுன்னாகம் பொலிசாரால் தேடப்பட்ட கட்டுவனைச் சேர்ந்த செல்லப்பா சுப்பிரமணியம், அருளானந்தம் சிவபாக்கியம் (பெண்), அருளானந்தம் மாதவன் ஆகியோர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் மல்லாகம் நீதிமன்றத்தில் ஏற்கனவே சரண் புகுந்தபோது 2ம், 3ம் சந்தேக நபர்கள் மட்டும் 1000 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு 1ம் சந்தேக நபர் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கு மீண்டும் மல்லாகம் நீதிபதிமுன் எடுக்கப்பட்ட சமயம் நீதிபதி எஸ். ஆனந்த குமாரசாமி 1ம் சந்தேகநபரை 1000 ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன் ஏப்ரல் 3ம் திகதி இது குறித்த விசாரணையை ஆரம்பிப்பதாகவும் அன்று சட்டவைத்திய அதிகாரியை சாட்சியமளிக்க அழைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணிகள், ஆர். ஈ. தம்பிரத்தினம், எஸ். பரமநாதன் ஆகியோரும் எதிரிகள் தரப்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், சிவஸ்ரீதரன் ஆகியோரும் ஆஜராகினர். (அ)

## இன்று திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

புதிதாக நிறுவப்பட்டுள்ள குருநகர். சென். ஜேம்சன சமூக நிலையக் கட்டிடத்தை இன்றுமாலை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ திறந்து வைப்பார், யாழ்ப்பாண எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்- [கு-அ]

## வைரவிழா பேச்சுப்போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட வைரவிழா ஏப்ரல் 8ந் திகதி முதல் 14ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

வைரவிழாவுக்குரிய கலைகளாச்சாரப் போட்டிகள் சென்றமாதம் 24ம் திகதி தொடக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இம்மாதம் 4ம் திகதி நடைபெற்ற ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் மேற்பிரிவில் செல்வன் ஜெ. கிறிஸ்ரிரிஷிகரன் முதலாமிடத்தையும் மத்தியபிரிவில் செல்வி பாலசெல்வதி பாலசுப்பிரமணியம், செல்வன் இரத்தினபாலசிவசுந்தரம், செல்வி தாரணி தியாகராசாவும் கீழ்ப்பிரிவில் செல்வி குமுதினி தேவராசா, செல்வி வித்தியா தியாகராசா, செல்வி சுகந்தி கார்த்திகேசு ஆகியோரும் பெற்றுள்ளனர். [ச]

# உயர்கல்விப் பிரச்னைக்கு தீர்வு காண...

[அரியாலை]

"மொழியானது கருத்தை எடுத்துக்கூறும் சாதனமாகும். எந்தவொருநாட்டில் பல்கலைக்கழக அனுமதி மொழிவாரியாக நிர்ணயிக்கப்படுகிறதோ அந்த நாடு அநாகரிகமானதாகும். உயர்கல்விப் பிரச்னையைத் தீர்க்க ஒரேயொரு மார்க்கம்தகுதிபெற்றயாவரையும் பல்கலைக்கழகத்தில் அனுமதிப்பதாகும். போதியளவு மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறக்கூடிய நிலையில் பல்பலைக்கழக வசதிகளை அதிகரிக்கவேண்டும்".

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரிச் சமூக அறிவியற்கழகத்தின் 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற சொற்பொழிவுத் தொடரில் 'கல்வியும் பயனும்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. சச்சிதானந்தன் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "கல்விக்கு ஒரு எல்லையில்லை. இக்கல்வியில் சிறிய அளவையாவது கற்கமுயலும் ஆர்வமிக்கமாணவரை அரசின் இன்றைய தரப்படுத்தல் முறை தெருவிலே தள்ளிவிடுதலுக்கு ஒப்பாகும். நாம் பெறும் கல்வி எம்மை வளம்படுத்தவும், கடவுளைத்தேடித் தொழவும் வழி வகுக்கிறது" என்று கூறினார்.

கழகத் தலைவர் செல்வன் சஞ்சயன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தரப்படுத்தல் சம்பந்தமாகவும், தமிழ் மாணவரை எதிர்நோக்கும் பிரச்னைகள் சம்பந்தமாகவும் மாணவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு திரு. சச்சிதானந்தன் விடையளித்தார். [அ]

# பூச்சி மருந்து தெளித்தவர் வாந்தியெடுத்து மரணம்!

[சாவகச்சேரி]

மிளகாய்ச் செடிக்கு பூச்சி மருந்து தெளித்துவிட்டு வந்த விவசாயி சாப்பிட்டபின்வாந்தியெடுத்து மரணமானார்.

மிருசுவில் கெற்பெலியை சேர்ந்த கந்தையா கார்த்திகேசு ஜெகநாதன் என்ற இளைஞனின் மரணவிசாரணையில் மேற்கண்டவிபரம் தெரிய வந்தது.

சாவகச்சேரிமரணவிசாரணை அதிகாரி திரு. கந்தசாமி மரணவிசாரணை நடத்தி விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

சாவகச்சேரிபொலிஸ்கான்ஸ்டபிள் திரு. கே. வல்லிபுரம், இளைஞரின் தாய், சகோதரன் ஆகியோர் சாட்சியம் அளித்தனர். [ச]

நெடுந்தீவில்

## இன்று கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

பாவனையாளர் பாதுகாப்பு சட்டத்தை சரியான முறையில் அமுல்நடத்துவது தொடர்பாக வர்த்தகர்களின் கருத்தரங்கு இன்று 13ம் திகதி காலை 10 மணிக்கு நெடுந்தீவில் நடைபெறவிருக்கிறது இக் கருத்தரங்கில் யாழ். விலைக் கட்டுப்பாட்டதிகாரி திரு முருவேள் உரையாற்றுவார். [அ]

## கிணற்றுக்கு மூதாட்டி பலி!

[புலோலி]

கிணற்றில் நீர்அள்ளி முகம் கழுவச்சென்ற வயோதிபமாது ஒருவர் தவறிகிணற்றுக்குள் விழுந்து மரணமானார். வல்வெட்டி, சித்தப்பத்தனையைச் சேர்ந்த செல்லமுத்து என்பவரே இணற்றுக்குப் பலியானவராவர். இவரது மரணம் குறித்த விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் மேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிஸைச் சேர்ந்த எம் எம் எச் மாரசிங்க சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

இறந்தவரின் மகனான சின்னத்துரை, சுப்பிரமணியம் சின்னத்தம்பி, பொலிஸ் கான்ஸ்டபிள் கதிர்த்தம்பி செல்வராசா, பவளக்கண்டு ஆகியோர்களின் சாட்சியங்களையடுத்து விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

## கால்நடை பற்றிய படக்காட்சி

[யாழ்ப்பாணம்]

கால்நடை வளர்ப்பவர்கள அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய கால்நடை பராமரிப்புப்பற்றிய இலவசப் படக்காட்சி ஒன்று இன்று திருநெல்வேலி சிவன்கோவில் அருகில் காட்டப்படவிருக்கின்றது.

கால்நடை பராமரிப்பு-நோய்த்தடுப்பு திணைக்களத்தினர் இப்படக்காட்சியை ஏற்பாடுசெய்திருக்கிறார்கள்.

செயற்கைமுறை சினைப்படுத்தல், கன்றுபராமரிப்பு, பால் கறத்தல், பால்விளைச்சல் மற்றும் நோய்த்தடுப்பு சம்பந்தமான படங்கள் காட்டப்படவிருக்கின்றன,

## கடமைநேரத்தில் தாக்கினாராம்

[மாவிட்டபுரம்]

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையிலிருந்த விற்பனையாளர் ஒருவர் கிளைக் குழுச் செயலாளரால் தாக்கப்பட்டாராம். சுன்னாகம் பொலிசில் இதுகுறித்து புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க 20 ம் இலக்க குப்பிளான் கிளையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதுகுறித்து தொழிலாளர் பிரதிநிதி திரு. சி. செல்வராசாவிடமும் மேற்படி விற்பனையாளர் புகார் தெரிவித்ததையடுத்து சங்கத்தலைமைப் பீடத்திற்கும் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூடைப் பந்தாட்டப் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

தேசிய கூடைப்பந்தாட்டப் பயிற்சியாளர் சங்கம் யாழ். மத்திய கல்லூரி அரங்கில் கூடைப்பந்தாட்டப் பயிற்சி முகாமை இருதினங்களின் முன் ஆரம்பித்துவைத்தது.

இறுதிநாளான இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் யாழ். இந்து மகளிர்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, ஒஸ்மானியாக் கல்லூரி, நல்லாயன் பெண் பாடசாலையைச் சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்துகொள்கின்றனர்

யாழ். மெற்றல்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் இப்பயிற்சி முகாமை தேசிய பயிற்சியாளர் திரு. இராம் சுந்தரலிங்கம் மேற்பார்வைசெய்துவருகிறார். (கு-இ)


JAFFNA LAW CENTRE
நடாத்தும்
1979 ஏப்ரல் G. C. E. (A/L)
கலை வர்த்தக மாணவர்க்கான
**கருத்தரங்கு**
16-3-79 முதல் 27-3-79 வரை
இடம்: யாழ். சட்ட நிலையம்
வெலிங்டன் அருகாமை, யாழ்ப்பாணம்.

### "மலையக மக்கள் உரிமைக்குப் போராடிய

# இ. தொ. கா. இன்று பிறர்உரிமை வழங்குவதில் பங்குகொள்ளும் நிலையிலுள்ளது"

## பதுளைமாநாட்டில் அமைச்சர் தொண்டமான்

பதுளை சேவுகப் பெருமாள் அரங்கிலிருந்து எஸ். எம். கோபாலரத்தினம்

"நாற்பதாண்டுகள் உரிமைக்காகப் போராடிய மலையக மக்களின் ஒன்று பட்ட இயக்கமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று மற்றவர்களுக்கும் உரிமை வழங்குவதற்குப் பங்கு கொள்ளக்கூடிய நிலையில இருக்கிறது. இன்று இந்த அளவுக்கு முன்னேற்றம் பெற்றிருக்கிறதென்ருல் அது தொடர்ந்துநடத்திய போராட்டத்திஞலதான் என்பதை எவரும மறுக்கமுடியாது".

இவ்வாறு இ தொ. கா தலைவரும சிறுதொழில் கிராம சேவை அமைச்சருமான திரு எஸ் தொண்டமான் நேற்று முன்தினம் பதுளை மாநகரில் சரஸ்வதி வித்தியாலயத்தில் மாணவிகளின் பாண்டுவாத்தியம் முழங்க ஆரம்பித்து வைத்த இ தொ. காங்கிரஸின் 26 வது மகாநாட்டின் விஷயாலோசனைக் கூட்டத்தை ஆரம்பிதுவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பழைய சம்பவங்களையும் நிலைமைகளையும் எடுத்துக் கூறிய திரு. தொண்டமான் மலையகத் தொழிலாளர்கள் உரிமையுடன் நின்று விடாமல் பொருளாதாரத்திலும் சுதந்திரம் பெறவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திஞர்.

விஷயாலோசனைக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்து உரைநிகழ்த்திய பதுளை எம் பி இந்நாட்டில் இனமதவேறுபாடில்லாத சமுதாயத்தை அமைப்பதற்காகவே ஜஞதிபதி திரு ஜே ஆர்.. இ. தொ. தலைவரான க திரு தொண்டமானையும் ஒரு அமைச்சராக நியமித்தார் என்றும் மகாநாடு ஒரு பிரச்சினையுமில்லாமல் நடைபெறுவதற்குப் பொலிசார் தகுந்த பாதுகாப்பளிப்பார்களென்றும் மாநாட்டுப் பிரதிநிதிகளும் அவ்வாறு ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டுமென்றும் கூறிஞர்.

## மக்கள் கருத்து

### வவனியா உயர் மாணவர் கஷ்டம்

வவனியா மாவட்டத்தில் உயர் கல்வி கற்கும் மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தங்கள் படிப்பில் கவனம் செலுத்துவதை எல்லோரும் புரிந்துகொள்ளமுடியும். காரணம், போதிய பாடசாலைகளின்மை, ஆசிரியர் பற்ருக்குறை, தனியார் கல்விக்கூடங்களின்மை போன்றவை.

இக்கஷ்டங்களின் மத்தியில் எதிர்நீச்சல் போடுவதற்கு மாணவர்களுக்குப் பெருமபாடாக விளங்குவது வவனியா பொது சன நூலகம், தற்போது பொதுசன நூலகத்தின்நிலை மாணவர்களுக்குக் கைகொடுப்பதாகவில்லை

ஆகஸ்ட் கலவரத்தின்பின் வவனியா பொதுசன நூலகத்துக்குச் சொந்தமான அழகான போதிய வசதிகளமைந்த கட்டிடம் இராணுவத்தினருக்குக் கொடுக்கப்பட்டதன் காரணமாக தற்போது நூல் நிலையம் நகரசபை மண்டபமொன்றில் இயங்கிவருகிறது. முன்பு தனித்தனி பிரிவுகளாக இருந்த உடனுதவும்பகுதி, வாசிக்கும்பகுதி, இரவல் கொடுக்கும் பகுதி, சிறுவர் பகுதி என்பன இம்மண்டபத்திற்குள்ளேயே இப்போது அடக்கப்பட்டுள்ளன. இதனால் சந்தடி முதலானவற்ருல் சூழல் கெடுகின்றது. அமைதியாகப் படிக்கமுடிவதில்லை.

உயர்தர வகுப்பு நூல்கள் இருந்தும் அவற்றைப்பாவிக்க முடியாதநிலை, மாணவரால் விலை கொடுத்து வாங்கமுடியாத எத்தனையோ புத்தம் புதுப் புத்தகங்கள் கண்ணுடி அலுமாரியொன்றினுள் காட்சிப் பொருள்களாக வைக்கப் பட்டுள்ளன. அலுவலகப் பொறுப்பாளர்களிடம கேட்டால், மேலிடத்து உத்தரவின் படி, அவ்வலுமாரியில் உள்ள புத்தகங்களை எடுத்து படிக்க முடியாதென்கின்றனர். அவை வேறெங்கேயோ எடுத்துச்செல்ல வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். ஆனுல்; கடந்த இரண்டு வருடமாக இப்புத்தகங்கள் நூல் நிலையத்தில் காட்சிப் பொருளாக தேங்கிக்கிடப்பது குறிப்பிடத்தக்கது.

உயர்பரீட்சைக்கு இன்னும் சிலவாரங்களே இருக்கும் இந்நேரத்திலாவது இவ்வலுமாரியை மாணவர்களுக்குத் திறந்து உதவிசெய்யும் பணியில் வவனியா நகர சபை முயற்சி எடுக்குமா?

அ. அன்ரனி மனோகரன்,
உயர்தர வகுப்பு மாணவன்.
வவனியா.

### நீர்ப்பாசன இலாகா கவனிக்குமா!?

முத்தையன் கட்டு ஓர் உப உணவுப் பயிர்ச் செய்கைத் திட்டம், மிளகாய், வெங்காயம் போன்ற உப உணவுப் பயிர்களே இங்கு பயிரிடப்படுகின்றன. இந்தவகையான பயிர்ச்செய்கைக்கு நீர்வழங்கும் வாய்க்கால்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வாறேமேலதிக (மழை) நீரை வெளியேற்றும் கழிவு வாய்க்கால்களும் முக்கியமானதாகும். இதனுலேயே இத்திட்டத்தில் தேவையான இடங்களில் கழிவு நீர்வடிந்து செல்ல வழிகைகள் நீர்ப்பாசன இலாகாவால் செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வாறே ஒலதுகரை படித்த வாலிபர் திட்டம் 2ம் படிவத்திலும் நீர்ப்பாசன இலாகாவால் நிர்மாணிக்கப்பட்டு கடந்த பத்து வருடங்களாக உபயோகிக்கப்பட்டு வந்து கழிவு வாய்க்காலை நீர்ப்பாசன இலாகாவே திடீரென மூடிவிட்டது. புதியதோர்வழியாக வாய்க்கால் அமைக்க முடிவு செய்திருப்பதாலேயே அவ்வாறு செய்ததாக அதிகாரிகள் கூறுகிருர்கள். கழிவு வாய்க்கால்கள், திட்டம் அபிவிருத்தியடைய, அடைய மாற்றங்களுக்கு உட்படுவது இயல்பே ஆனுல் மாற்றுவழி அமைக்குமுன் இதுவரை உபயோகிக்கப்பட்டுவந்த வழியை மூடியிருக்கத் தேவையில்லை. இறுதியில் செயய வேண்டிய வேலையை முதலிலேயே செய்துவிட்டார்கள். இதனுல் ஐந்து காணிகளில் பல ஏக்கர் நிலம் இம்முறை பயிரிடாமல் விட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது

மிளகாய் நடுகைக்கான கடைசித் தவணையும் அண்மித்துவிட்டது. ஆனுல் புதிய வாய்க்கால் அமைப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும செயலில் எடுக்கப்படவில்லை இந்த நிலையில் பாதிக்கப்படும் காணிக்காரர்களால் குறித்த நிலத்தில், மழை பெய்ததும் நீரில் மூழ்கக்கூடிய நிலையில் ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழித்து நம்பிப் பயிர் செய்யமுடியுமா? நீர்ப்பாசன இலாகா உத்தரவாதமளிக்குமா?

நீர்ப்பாசன இலாகாவின் பொறுப்பற்ற நடைமுறையால் பல விவசாயிகள் இவ்வருட வருமானத்தை இழக்க வேண்டியவர்களாக இருக்கிருர்கள். நிர்வாகத் தாமதங்களால் புதிய வாய்க்கால் அமைப்பது சிறிது தாமதமாகலாம். அதுவரை, சில குழாய்களை வீதிக்குக் கீழாகப் பொருத்துவதன் மூலம் பழைய நிலையை மீண்டும் ஏற்படுத்தி விவசாயிகள் நம்பிப் பயிரிட நீர்ப்பாசன இலாகாவினர் வழிவகை செய்வார்களா?

அ- சுப்பிரமணியம்,
முத்தையன்கட்டு

### வதிரியில் இன்று சிறுவர் தினவிழா

[யாழ்ப்பாணம்]

வதிரி தமிழ் மன்றம் மாதந்தோறும் நடாத்திவரும போயா விருந்தில், சர்வதேச சிறுவர் ஆண்டினை முன்னிட்டு இன்று போயா தினத்தினைச் சிறுவர் தினவிழாவாக நடாத்துகின்றது.

பல அறிஞர்கள் பங்குகொள்ளும் கருத்தரங்கு, கவியரங்கு மற்றும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும். மாலை 6-30 மணிக்கு மன்ற மண்டபத்தில் ஆரம்பமாகும் இவ்விழாவினை வதிரி தமிழ் மன்ற பாலர் பாடசாலை வதிரி தமிழ் மன்றமாதரணி ஆகியன இணைந்து நடாத்துகின்றன. [அ]

### தவக்கால நற்சிந்தனை

"ஆண்டவர் உலகத்தை நியாயந்திர்க்க வரும்போது, பரலோகத்தில் சிலுவையின் அடையாளம் காணப்படும். பூலோகத்தில் தங்கள் உயிரோடு இருக்கும்போது சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவுக்கு அடங்கியிருந்த சிலுவையின் ஊழியர் தங்கள் நீதிபதியாகிய அவரிடம் மிகுந்த தைரியத்தோடு வருவார்கள்."

(கிறிஸ்துநாதர் அனுசாரம்)

சிலுவையின் கோலம் வெறும் பாவமன்னிப்புக்கு மட்டும் ஏற்பட்டதன்று அப்பரிசுத்த சின்னம் நியாயத்தீர்ப்புக்கு வழிகாட்டியாகிய இராஜ பாதையுமாகும். நாம் செய்கின்ற பழிபாவங்கள், பலவகைக் கேடுகள் அத்தனைக்கும் கடைசிக் காலத்தில் நியாயந்திர்க்கும் சின்னமாகவும் சிலுவை காட்சி அளிக்கிறது.

அந்தப் பரிசுத்த சின்னம் இதோ நம் கண்முன்னே காட்சி அளிக்கிறது அதை நெருங்குவதற்கு நாம் ஏன் பயப்படவேண்டும்? தெய்வீகச் சின்னமாகிய சிலுவையை மறந்து நாம் எங்கே போய் வாழ முடியும்

—ஞானஒளி :

தொகுப்பு : வில்பிறெட்

### விஷயாலோசனைக் குழுக் கூட்டத்துடன் ஆரம்பம்

[பதுளை]

[சேவுகப் பெருமாள் அரங்கிலிருந்து எஸ். எம். கோபால ரத்தினம்]

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 26 வது மாநாடு நண்பகல் விஷயாலோசனைக் குழுக் கூட்டத்துடன் ஆரம்பமானது.

பதுளை எம். பி. திரு. வின்சன் டி டயஸ் பௌத்த கலாசாரத்தை அடிப்படையாகக்கொண்டு குருத்தோலை வேலைப்பாடுகளால் சரஸ்வதி வித்தியாசாலையின் முகப்பில் அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவை வெள்ளை நாடாவை வெட்டியும் பின்னர் வித்தியாசாலை மண்டபத்தில் விஷயாலோசனைக் குழுக் கூட்டத்தையும் ஆரம்பித்துவைத்தார்.

விஷயாலோசனைக் குழுக் கூட்டத்தை ஆரம்பித்துவைக்கு முன்னர் கூட்ட மண்டபத்துக்கு முன்பாகவுள்ள கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறும் வித்தியாலய மைதானத்தில் இருமருங்கிலும் நாட்டப்பட்டிருந்த இரண்டு கொடிக் கம்பங்களில் ஒன்றில் தேசியக் கொடியை பதுளை எம், பி. திரு வின்சன்ட் டி டயஸும், மற்றதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மத்தியில் உதயசூரியன் சின்னம் பொறிக்கப்பட்ட பச்சை, வெள்ளை, ஆரஞ்சு வர்ணங்களைக்கொண்டகொடியை காங்கிரஸ் தலைவர் திரு எஸ். தொண்டமானும் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை ஏற்றும்போது கொளுக்கியில் இடையூறு ஏற்பட்டதால் தொண்டர்களில் ஒருவனன சிறுவன் கம்பத்தில் ஏறிச் சீர் செய்தான்.

காங்கிரஸ் மாநாட்டையொட்டி நகரில் முக்கியமான இடங்களில் மூவர்ணக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. மற்றும் பல இடங்களில் பச்சைக் கொடிகளும் பறந்து கொண்டிருந்தன.

பொலிசார் பல இடங்களிலும் பலத்த ரோந்துக்காவலில் ஈடுபட்டிருந்தனர்.

இதேசமயம் வெள்ளிக்கிழமை பிற்பகல் பதுளை நகரில் ஒலிபெருக்கி அறிவிப்பு ஒன்று கௌரவ ஜனுதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவை பதுளைக்கு அழைத்திருப்பதாகவும் அவர் 11ந் தேதி பிற்பகல் டி. எஸ். சேனநாயகா திடலில் உரை நிகழ்த்துவாரென்றும் அக்கூட்டத்தில்அமைச்சர்கள் காமினி திஸநாயகா, லலித் அத்துலத் முதலியுடன் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானும் கலந்து கொண்டு பேசுவாரென்றும் அறிவிக்கப்பட்டது

இ. தொ. காங்கிரஸின் மாநாட்டு வைபவத்தில் சரஸ்வதி வித்தியாலய அதிபர் குத்துவிளக்கை ஏற்றிவைத்தார். [அ]

### பொது எழுதுவினைஞர் சேவை

### விசேட தரத்திற்கு 22 தமிழர் பதவிஉயர்வு

[யாழ்ப்பாணம்]

பொது எழுதுவினைஞர் சேவை முதலாம் தரத்தில் கடமையாற்றியவர்களில் 64 பேரை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அதிவிஷேச தரத்திற்குப் பதவியுயர்வு வழங்கியுள்ளது இவர்களில் 22பேர் தமிழர்களாவர்.

அவர்கள் விபரம் வருமாறு: திருவாளர்கள் எஸ் தர்மராஜா, வி குணநாயகம், கே சித்திரவேலு, எஸ் குமாரதேவர், எவ் இராஜரத்தினம், எஸ் அரியரத்தினம், வீ கந்தசாமி, எம். முத்துக்குமாரசாமி, கே ஆறுமுகம், எஸ் கந்தசாமி, வி சிபரமநாதன், ஆர் இராஜசிங்கம், யூ. கணபதி பிள்ளை, என் சுந்தரம், எஸ் எம் சக்காரியஸ்,எஸ் அரசு. எம் ரி தங்கையா, கே, சிவஞானம் ரி குலசேகரம், எம் என் மகாதேவா, ரி துரைரத்தினம் எவ் காரியவாசம்

பொது எழுதுவினைஞர் சேவை முதலாம் தரத்திலிருந்து அதிவிசேஷ தரத்திற்கு பதவியுயர்வுக்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 26 பேரில் திரு. கே ஐயம்பிள்ளை, திரு கே வீரசிங்கம் ஆகிய இரு தமிழருமே சித்தியடைந்துள்ளனர் [கு-அ]

### உதவிக்குருவாக அபிஷேகம்

[கொக்குவில்]

திரு. தே சா பிரேமராசா உதவிக்குருவாக அபிசேகம் பெறுவதற்கான ஆராதனை வைபவம் தென்இந்திய திருச்சபையின் யாழ்ப்பாணத்து அத்தியட்சகர் திரு டி ஜே. அம்பலவாணர் அவர்களினுல் கடந்த 3-ம் திகதி வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் நடத்தப்பட்டது

அளவெட்டி திருச்சபை ஊழியன் திரு வி க தேவதாசன் தம்பதிகளின் புத்திரனை இவர் உதவிக் குரு அபிசேகம் நடாத்தப்பட்டுக்கொழும்புத் திருச்சபையில் ஊழியனுக கடமையாற்றி வருகிருர்.

# உண்மை ஒப்பந்தத்தையே இஸ்ரேல் விரும்புகிறது

## வெற்றுக் காகிதத்தை அல்ல என்கிறுர் பிரதமர் பெகின்

ஜெருஸலம், மார்ச்12 மத்தியகிழக்கு அமைதி குறித்த உண்மையான ஒப்பந்தத்தையே இஸ்ரேல் விரும்புகிறது. வெற்றுக்காகிதத்தை இஸ்ரேல் ஒருபோது விரும்பாது. இவ்வாறு இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டருக்கு தாம் அளித்த விருந்துபசாரத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே உள்ள பாரதூரமான பிரச்னைகள் தீர்க்கப்பட்டாலே அமைதி ஒப்பந்தத்தில் தம்மால் கைச்சாத்திடமுடியும் என்றும் திரு பெகின்கூறினார்.

60லட்சம் யூதமக்களை நாஸிகள் முன்னர் கொலை செய்ததை இஸ்ரேலியர்கள் என்றுமே மறக்க மாட்டார்கள் என்றும் திரு. பெகின் திரு. கார்ட்டரிடம் கூறினார். (இ)

# றொடீஷிய மக்களுக்கு சி. ஐ. ஏ. இராணுவப்பயிற்சி

## தேசப்பற்று முன்னணி கண்டனம்

சாலிஸ்பரி, மார்ச். 12

அமெரிக்க சி. ஐ. ஏ. நிறுவனமும், பிரிட்டிஷ் இராணுவ ஒற்றர் நிறுவனமும் றொடீஷிய மக்களுக்கு இராணுவப்பயிற்சிகளை அளித்து வருகின்றன என்று என்கோமாவின் றொடீஷிய தேசிய சிம்பாவே தேசப்பற்று முன்னணிகுற்றம்சாட்டியுள்ளது.

பிரிட்டன், அமெரிக்கா ஆகியநாடுகள் றொடீஷிய சிறுபான்மை ஆட்சியினருக்கு போர்விமானங்களையும் ஆயுதங்களையும்விநியோகம்செய்து வருகின்றன என்றும் தேசப்பற்றுமுன்னணி குற்றம்சுமத்தியுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் ஆயுதங்களை றொடீஷியாவில் தேசிய விடுதலைப் படையினர் கைப்பற்றியுள்ளனரென்றும் இம்முன்னணிகுற்றஞ்சாட்டியுள்ளது. (இ)

### பாக், ஈரான் விலக முடிவு

தெஹ்ரான், மார்ச். 12 மத்திய ஒப்பந்த ஸ்தாபனத்திலிருந்து ஈரானும் பாகிஸ்தானும் விலகப் போவதாக அறிவித்துள்ளன.

துருக்கி, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளும் அங்கம் வகிக்கும் இந்தஸ்தாபனத்தில் வல்லரசுகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாக ஈரானும் பாகிஸ்தானும் குற்றம் சுமத்தியுள்ளன. (இ)

### பெகினுடன் பேச்சு நடத்திய போது

# கார்ட்டர் உற்சாகம் இன்றி காணப்பட்டார்

ஜெருஸலம், மார்ச் 12 மத்திய கிழக்கு விவகாரம்குறித்து நேற்று இஸ்ரேலியப்பிரதமர் திரு. பெகினுடன்பேச்சு நடத்தியபோது அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் உற்சாகமின்றியே காணப்பட்டதாக ஜெருஸலம் செய்திகள் திரு. கார்ட்டரின் ஆலோசனைகள் இன்றைய மந்திரிசபைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் தெரிவிக்கின்றன.

எனினும் திரு. கார்ட்டர் இன்று இஸ்ரேலிய மந்திரி சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (இ)

### 30 லட்சம் பேருக்கு மனேவளர்ச்சி இல்லை

புதுடில்லி, மார்ச். 12 இந்தியாவில் 30 லட்சம்பேர் மனேவளர்ச்சியற்ற நிலையில் இருக்கிறார்கள் என்று இந்திய சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய மக்களின் மனேவளர்ச்சி குன்றியதற்குக்காரணம் மக்களுக்கு உரியவழியில் அறிவை வளர்க்கப் போதிய வசதிகளில்லாததேயாகுமென்றும் அவர் கூறினர். (இ)

# ஜம்முகாஷ்மீரில்,

## கடும் பனிப்பொழிவு

### 200 பேர் பலி!

காஷ்மீர், மார்ச். 12 ஜம்மு:காஷ்மீர் பகுதியில் உள்ள லாகூர், தாங்கிபளைத்தாக்கு பிரதேசங்களில் பனிப்பொழிவினலும், பனிப்பாறை சரிவுகளினலும் 200பேர்வரை பலியாகினர் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதிமுதல் இப்பகுதியில் கடும் பனிப்பொழிவு இடம்பெற்று வருகிறது.

இப்பகுதியிலேற்பட்ட மலைச்சரிவு, கற்பாறைசரிவு, பனிப்பொழிவு, பனிப்பாறைசரிவு ஆகியவற்றினல் இப்பகுதியில் வாழும் 5 ஆயிரத்துக்குமதிகமானேர் வெளியுலகிலிருந்து துண்டிக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்கு ஹெலிகொப்டர் மூலம் உணவு வழங்கப்படுகிறது. (இ)

### எல்லைக்காவல் நிலையங்களை

# சீன வியட்நாமுக்குள் மாற்றி அமைத்து வருகிறது

## ஹனேய் குற்றச்சாட்டு

ஹனேய், மார்ச் 12 வியட்நாமைவிட்டு வெளியேறும் சீனப்படைகள் வடகிழக்கு எல்லைக் காவல்நிலையங்களை வியட்நாமுக்குள்ளேயே புதிதாக அமைத்து வருகின்றன என்று வியட்நாம் குற்றம்சாட்டியுள்ளன.

வியட்நாம பிரதேசத்தை தமக்குச் சொந்தமாக்கும் நோக்குடனேயே எல்லைக் காவல்நிலையங்களை சீனப் படைகள் வியட்நாமுக்குள் அமைத்துவருகின்றன என்றும் ஹனேய் வானெலி குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளையில் வியட்நாமிலிருந்து சீனப்படைகள் இன்னும் ஒரிரு நாட்களில் வெளியேறிவிடும் என்றும் சீன உதவிப் பிரதமர் திரு டெங் சியாவோபெங்பீக்கிங்கிலுள்ள தாய்லந்து தூதுவரிடம் கூறினர். (இ)

# இன்றைய பலன்

மாசிமாதம் 29-ம் திகதி

(13-3-1979)

செவ்வாய்க்கிழமை

மேடம்: வெல்லம்போல் இனிக்கும் வாழக்கை பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள், தானதருமங்களிலும் ஈடுபாடு ஏற்படும், நல்ல தினம்.

இடபம்: பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும் தொழில்துறையிலும் முயற்சி உண்டு, நன்மையான மாற்றங்களுக்கும் இடமேற்படும்.

மிதுனம்: புத்திரர் செல்வாக்குப் பெருகும், புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும், பூமியால் முன்னேற்றமுண்டு.

கடகம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும், உடலநலம் பாதிக்கப் படலாம், விளைபொருள்களினல் பணம் விரயமாகும், கட்டுப்பாடு அவசியம் வேண்டும்.

சிங்கம்: அவசரம் போக்கினல் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக் கூடும், இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும், பிள்ளை ஒன்றின் உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

கன்னி: இதயப் படுதாவில் இன்பக்கூத்து, சிலர் நுட்பமான வேலைகளில் ஈடுபடுவர், சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும்.

துலாம்: மனதில் உற்சாகம் குன்றும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும், உறவுமுறைகளில் பிளவுகளே தென்படும்.

விருச்சிகம்: ஆசிரியர்கள் வாழ்க்கையில் போற்றப்படுவர், பொதுத்துறைகளிலும் நாட்டம் பிறக்கும், நீண்ட நாள் பிரச்னைக்கு இன்று முடிவு காணப்படும்.

தனுசு: மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்படும், எற்சாகமான வரவேற்பும் கிடைக்கும்.

மகரம்: வெளியிடத்துப் பயணமொன்றும் மேற்கொள்ளப்படலாம், உடல்நலத்தைப் பேணி நடக்கவும், புதிய முதலீட்டைப் பின் போடவும்.

கும்பம்: பிரமச்சாரிகள் வாழ்க்கையில் காதல் கனைதாகும், பொருள் வருவாயில் புதிய திருப்பம் ஏற்படும், மன நிறைவுக்கும் இடமுண்டு.

மீனம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றும், பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறலாம், முன் யோசனையுடன் செயலாற்றவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# திபெத்தில் சீன

## ராணுவ நடவடிக்கைகள்

### காஷ்மீருக்கு அருகே தீவிரம்!

புதுடில்லி, மார்ச். 12 காஷ்மீருக்கருகாமையிலுள்ள பிரதேசத்தில் சீன ராணுவநடவடிக்கைகள் துரிதமடைந்து விட்டதாக செய்திகள் கூறுகின்றன.

இப்பிராந்தியத்தில் கடந்த சில மாதகாலமாக புதிய ராணுவகேந்திர முக்கியம் வாய்ந்த வீதியொன்றையும், போர்விமான நிலையமொன்றையும் சீன நிர்மாணித்துவருகிறது.

சீன சிங்கியாங்கை கராச்சியுடன் இணைக்கும் காரைக்கோரம் வீதி 1978ல் திறக்கப்பட்டதும் இந்தியா இதை ஆட்சேபித்திருத்திருந்தது

திபெத்திலும சீனராணுவத் தயாரிப்புகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. 'டெய்லி டெலிக்கிராஃப்'' செய்தியின்படி 1977 ஆகஸ்ட்முதல் 1978 ஏப்ரல் வரை 150,000 சீனத் துருப்புகள் திபேத்துக்கனுப்பப்பட்டன. இன்று அங்கே ராணுவபலம் 350,000 ஆக பெருகியுள்ளது. கடந்த ஏப்ரல் 1978 முடிவடைய திபேத்தில் 12பாரியவிமானப்படைத் தளங்களும், பல விமான நிலையங்களும் நிர்மாணிக்கப்பட்டன.

இந்திய எல்லைக்கருகாமையில் நடக்கும் இந்த ராணுவ நடவடிக்கைகளுடன், சீன உளவு நடவடிக்கைகளும் சூடுபிடித்துள்ளன. 1978 இரண்டாம் பாதியில் மாத்திரம், சீனவில் பயிற்சிபெற்ற இந்தியாவின் வட-கிழக்கு ராஜ்யங்களுக்குள் ஊடுருவியஒற்றர்கள், நாசகாரர்கள் முதலானேர் 100பேர் கைது செய்யப்பட்டனர். ஸ்தலமக்களை அரசுக்கெதிராக தூண்டிவிடுவது, அரசியல் பிரபலஸ்தர்களைக் கொலைசெய்வது, பொருளாதாரத்தை சீர்குலைப்பது இத்தியாதி இவர்களின் நோக்கமாகும். 1978 ஜூலையில் மணிப்பூர் ராஜ்யத்தில் கைதான 6 சீன ஒற்றர்கள திபெத்தில் பயிற்சியளிக்கப்பட்டதாக வாக்குமூலம் அளித்தனர்.

கடந்த ஜனவரி ஆரம்பத்தில் சீன ஆதரவு பெற்ற நாகா ஜாதியினர் அஸ்ஸாமில் தாக்குதல் நடத்தியதால் 2,000 சிவிலியன் மக்கள் இறந்தனர். இதற்கிடையில், காபூல் செய்திகள் சில ஆப்கன் அரசுக்கெதிராக அரசு எதிர்ப்பு சக்திகளுக்கு ஆதரவளிப்பதா கூறுகின்றன. "லா அவ்ரோரே'' நிருபர் சந்தித்த அரசு எதிப்புவாதிகள், தமக்கு சீனவின் உதவி கிடைப்பதாக கூறியுள்ளனர். சீனவிலிருந்து அரசு எதிர்ப்பு வாதிகளுக்கு எல்லையினூடாக ஆயுதங்கள் வந்து குவிவதாக டெய்லி டெலிகிராஃப்''செய்தி கூறுகிறது.

# குடியாட்சியா, முடியாட்சியா?

## இளைஞர்கள் தீர்மானிப்பர்

தெஹ்ரான், மார்ச். 12 ஈரானில் முடியாட்சிவேண்டுமா? இஸ்லாமிய சோஷலிஸ குடியாட்டி வேண்டுமா என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பை ஈரானிய இளைஞர்களிடம் விட்டுவிட ஈரானிய அரசு தீர்மானித்துள்ளது.

இது குறித்து ஈரானிய இளைஞர்களிடையே வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இம்மாதம் 30ம் திகதிநடைபெறவுள்ள வாகெடுப்பில் 16 வயதுக்குட்பட்ட ஒருகோடியே 70 லட்சம் இளைஞர்கள் தமது வாக்குகளை அளிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

### நிதிவழங்க ஏற்பாடாம்

(வவனியா)

மாணவர்களின் பாடசாலை பகிஷ்கரிப்புக் காலத்தில், வேலை நீக்கம் செய்யப்பட்டு அதிர்ச்சி காரணமாக உயிரிழந்ததாகக் கூறப்படும் இரண்டு ஆசிரியர்களின் குடும்பங்களுக்கும் நிதி உதவி வழங்க பொஸ்டன் நகரிலுள்ள ஈழத்தமிழர் விடுதலைக் கழகம் நிதிதிரட்டி வருகிறது.

இத்தகவலை, தமக்கு தொலைபேசிமூலம் அறிவித்திருப்பதாக திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச் சபைக் கூட்டத்தில் அறிவித்தார். (செ)

# வடமாகாணவீடுகள்தோறும் பட்டுப்பூச்சி வளர்ப்பு

## தேசிய இளைஞர் சேவைச்சபை நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

தேசிய இளைஞர் சேவைச் சபை தனது அபிவிருத்தி வேலைகளை வவனியா. மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே இச்சபை தனது கிளையைத் திறந்து பணிபுரிவது தெரிந்ததே.

மன்னார், வவனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட பல திட்டங்களைத் தேசிய இளைஞர் சேவைச்சபை இயக்குனரும், பணம்பொருள் அபிவிருத்திச் சபையின் முகாமை இயக்குனருமாகிய திரு. க. கனகசூரியர் தேசிய இளைஞர் சேவைச் சபையிடம் சமர்ப்பித்துள்ளார்.

கால்நடை வளர்ப்பு, சிறுகைத்தொழில் பயிற்சி, பணம் பொருள் உபயோகம் ஆகியவை இத்திட்டங்களின் முக்கிய அம்சங்களாகும் இதைவிட பட்டு அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் வடமாகாணத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டத்தையும் தேசிய இளைஞர்சேவைச் சபைமூலம் செய்வதற்கு ஆவன செய்து வருவதாகவும் திரு. கனகசூரியர் தெரிவித்தார். இதன் பிரகாரம் எல்லை கலஹொறாண ஆகிய இடங்களிலுள்ள பட்டுப்பூச்சித் தோட்டங்களிலிருந்து முசுக்கட்டைச் செடிகளை வடமாகாணத்துக்கு விரைவில் அனுப்பிவைக்க ஆயத்தங்கள் செய்திருப்பதாகவும் தேசிய இளைஞர் சேவைச் சபை தனது தேசிய சேவைமூலமும், சிரமதான அடிப்படையிலும் ஒவ்வொரு தொகுதிகளிலுமுள்ள இளைஞர்களைப் பயன்படுத்தி இத்திட்டங்களைச் செய்துமுடிக்க இருப்பதாகவுமவர் தெரிவித்தார். [கு-அ]

## 25 ஆயிரம்...

[1-ம பக்கத் தொடர்ச்சி]

கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

மூன்றரை பவுண் தங்க நகைகளை ஒருவர் இடுப்பில் கட்டிவைத்திருந்ததை சுங்கப் பகுதியினர் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

உதவிப் பொலிஸ் அதிபர்கள் திரு பெரேரா, திரு ஹெரத் ஆகியோர் கச்சதீவில் கடமையில் ஈடுபட்டிருந்தனர். பொலிஸ் பொறுப்பதிகாரி திரு எஸ் சேனாதிராஜா பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இந்திய யாத்திரீகர்களுக்கும் இலங்கை இராணுவ சிப்பந்திகளுக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவுகளினால் சிறு கலவரம் தோன்றும்நிலை ஏற்பட்டது. இன்ஸ்பெக்டர் திரு எஸ் சேனாதிராஜா, பொலிஸ் உத்தியோகத்தர் திரு அழகக்கோன் கிராம சேவையாளர் திரு என் கணபதிப்பிள்ளை ஆகியோர் இதுசம்பந்தமாக இந்திய யாத்திரீகர்களுடன் சமாதானம் ஏற்படுத்தி நிலைமையைக் கட்டுப்படுத்தினர். யாத்திரீகராக வந்த இந்திய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இலங்கை இராணுவ சிப்பாய் ஒருவரால் தாகப்பட்டது தொடர்பாக இக்கலவரநிலை தோன்றியது. சனிக்கிழமை இரவு கச்சதீவில் ஜனத்திரள் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது.

கச்சதீவு புனித அந்தோனியார் சுற்றுப்பிரகாரம் சனிக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது. வணபிதா தேவராசா அடிகள் தலைமையில் வணபிதா பீட்டர் துரைரத்தினம் உட்பட மதகுருமார்கள் மூன்று நேர பூஜைகளை நடத்தி யாத்திரீகர்களுக்கு துணைபுரிந்தனர்.

பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒரு கோஷ்டியினரை பொலிசார் பிடிக்க முயன்றபோது இவர்கள் சனத்திரளில் மறைந்து தப்பிக்கொண்டனர். இவர்களிடம் இருந்த பணம் சூதாடிய இடத்தில் பொலிசாரால் எடுக்கப்பட்டு கச்சதீவு நீதிமன்றத்தில் பதில்நீதிபதி எஸ் கனகரத்தினம் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது. இப் பணத்தை அரசாங்க நிதியில் சேர்க்க நீதிபதி உத்தரவிட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிபதிகள் திரு மரியாம்பிள்ளை, திரு பீ கதிரவேலு ஆகியோரும் கச்சதீவுக்கு வந்திருந்தனர். கிளிநொச்சி எம் பி திரு. வி ஆனந்தசங்கரி வழமைபோல் இம்முறையும் வந்திருந்தார். கச்சதீவு இறங்குதுறை இல்லாத நிலைபற்றியும், தண்ணீர்த் தட்டுப்பாட்டால் உருவாகிய கஷ்டங்கள் பற்றியும் திரு ஆனந்தசங்கரி, அரசாங்க அதிபர் திரு லயனல்பெர்னாண்டோவுடன் கலந்துரையாடி

(6-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மக்கள்மீதான தப்பபிப்பிராயங்களை தீர்க்கும் முயற்சியில் யாழ். ஜி. ஏ.

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பலபாகங்களிலும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. ஆனால் அண்மைக்காலங்களில் வடபகுதியில் நடைபெற்று வரும்வன்செயல்களினால் தென் பகுதி மக்கள் வீண் பீதி கொண்டுள்ளார்கள். இதனால் விருந்தோம்பலில் சிறந்த வடபகுதி மக்களுடன், தென் பகுதி மக்கள் உறவாடி அவர்களது அன்பைப்பெறமுடியாது போகின்றது இதனைத் தவிர்ப்பதற்கு, யாழ்.மாவட்ட கலாச்சார சபை, தென் இலங்கையின் சிறந்த பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து இங்குள்ள உண்மைநிலையை அறிந்து அப்பகுதி மக்களுடன் உறவாடி தங்கள் பத்திரிகைகளில் நிலையை தெளிவுபடுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது.

இவ்வாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ இலங்கையின் தேசிய பத்திரிகையாளர் குழுவொன்று வடபகுதியின் உண்மைநிலையை அறிவதற்கு வருகை தருவதையொட்டிய ஏற்பாடுகளை கவனிப்பதற்காக கூட்டிய சிறப்பு மகாநாட்டில் இக்கருத்தை வெளியிட்டார்

மாநாட்டில் யாழ்.மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு எஸ் லோகேஸ்வரன், யாழ் மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் திரு எம் விதானகே, உதவி அரசாங்கஅதிபர் திரு எஸ் கணேசநாதன், உதவி அரசாங்க அதிபர் திரு எம் தர்மபாலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தென் இலங்கை மக்கள் வடபகுதிமக்கள்மீது கொண்டுள்ள தப்பபிப்பிராயத்தை நீக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் திரு பெர்னாண்டோ கூறினார்

திரு, லயனல் பெர்னாண்டோ அங்கு மேலும் கூறியதாவது: வட பகுதிஅரசியல் நிலைமை வேறாக இருப்பினும், யாழ்ப்பாண மக்கள் விருந்தோம்பலில் பண்பானவர்கள். இவர்களைப் பற்றி தென்பகுதி மக்கள் தவறான விண்பயம் கொண்டுள்ளனர். தென்பகுதி மக்களது பயத்தை போக்குவதானால் ஒவ்வொரு பத்திரிகையாளனும் இங்கு வந்து தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை பத்திரிகைகளில் கட்டுரைமூலம் வெளிப்படுத்த வேண்டும். எமது கலாச்சார பேரவையின் திட்டத்தை அரசும், சகல பத்திரிகை நிறுவனங்களும் வரவேற்றுள்ளன.

இம்முயற்சிக்கு பெருந்தொகையான பணம் செலவானாலும் இந்தநாட்டின் தேசிய ஒற்றுமைக்கும், ஒருவரை மற்றவர் புரிந்துகொள்வதற்கும் பயன்படுவதால் இம் முயற்சி பயனுள்ள பல நன்மைகளை அளிக்குமென நம்புகிறேன்.

### 23ம் திகதி விசேட குழு வருகிறது

இம்மாதம் 23ம் திகதி இருபத்தைந்துக்கு மேற்பட்ட பத்திரிகையாளர்குழு தகவல்ஒலிபரப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேஷ வாகனத்தில் தகவல் ஒலிபரப்பு சிரேஷ்ட உதவியாளர் திரு சி டி விக்கிரமசிங்காவின் வழிநடத்தலின்மீது இங்குவந்துசேரும். இக்குழுவில் 'காரிடியன்', 'ரிபுயூன்' பத்திரிகைகளின் விசேட நிருபர்களும், 'சந்தேஸ' செய்தி நிறுவன பிரமுகர் திரு கமினி நவரட்ண உட்பட பலரும் வருகிறார்கள். [கெ-இ]

## கோவிலில் திருட்டு

[காவலூர்]

கோவில் ஒன்றில் கதவுக்குத் தீ வைத்து உட்புகுந்தவர்கள் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளனராம்.

இச்சம்பவம் நேற்று இரவு ஊர்காவற்றுறை மேலைக்கரம்பன் முருகமூர்த்தி கோவிலில் நடைபெற்றுள்ளது.

தீ வைத்துக் கதவை நாசம் செய்துவிட்டு, உட்புகுந்து கோவில் தளவாடங்கள், குத்துவிளக்குகள் போன்ற பொருட்களைத் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனராம். கோவில் அர்ச்சகர் யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஊர்காவற்றுறைப் பொலிசார் இச்சம்பவம்பற்றி புலன் விசாரணை செய்துவருகின்றனர். (கு-அ)

## கும்பழாவளை சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்கோவில் நவகுண்ட சகித நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் இம்மாதம் 16 ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெறுகிறது. நவகுண்டயாகசாலையில் பூஜிக்கப்பட்ட நவோத்தர சகஸ்ர சங்குகளால் விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறும் இரவு விஷேட பூஜையைத் தொடர்ந்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் "வினைதீர்க்கும் விநாயகன்" என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவும் இடம் பெறும். (கை-இ)

## வருடாந்த உற்சவம்

[கொக்குவில்]

காரைநகர் திருமணற்காடு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெற்றது 15ம் நாள் தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும் நாளை இரண்டாம் நாள் காலை சங்கா அபிசேகம் நடைபெறும். காலை முதல் மாலை வரை ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர தவில் வித்துவான்கள் ஒன்றுசேர்ந்து வாசிப்பார்கள்.

மாலை ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள், இவற்றமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதிவசந்தா வைத்தியநாதன் உட்பட பலர் சிறப்பு சொற்பொழிவாற்றுவார்கள்.

வெலிங்டன் (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—மாலினி
சபாஷ்மீனா

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Killers of Kilimanjaro

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ராமராவ்-ஸ்ரீரஞ்சனி
மங்கள கௌரி

மனோகரா (யாழ்நகர்)
நாகேஸ்வரராவ்-சாவித்திரி
திருட்டு ராமன்
[புதிய பிரதி]

11-வது வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா நடித்த
தெய்வமகன்
[புதிய பிரதி]

REGAL (Jaffna)
Daily 5 Shows
10-30 a m., 2-00, 4-30, 7-00 & 9-30 p. m only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00, 2-00, 6-00 & 9-30
ரங்கராவ் — சௌகார் ஜானகி
ராஜசேவை
(புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7626 தினசரி
ஆசை அறுபதுநாள்

ஹிந்திப்பட இரசிகர்களின் நீண்டநாள் விருப்புக்கிணங்க! இதோ!! இப்பொழுது புதிய வெளியீடாக காண்பிக்கப்படுகிறது!!!
சாந்தி யாழ்நகர்
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ஜீற்றேந்திரா - ஜெயபாதுரி - பிரான்
"பரிச்சே" - "PARICHAY"
ஹிந்தி - ஈஸ்ட்மன் கலர் - Hindi - Eastman color
FULL OF SUSPENSE AND MUSIC
PLAY BACK: Mohamed Raffi...Asha Bostle
MUSIC: R. D. BURMAN

போயா தினத்தையொட்டி இன்று சினிமாக்காட்சியில்லை

# பொதுச்சபைக் கூட்டத்தில் 'அமிர்' கூறியது என்ன?

## கா. பொ. தரும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

நேற்றைய ''ஈழநாடு'' பத்திரிகையில் 6-ம் பக்கத்தில் ''அமிர் கூட்டிய இளைஞர் பேரவைக் கூட்டம் ரத்தானது'' என்ற தலைப்பிலும், ''சந்ததியார் கோஷ்டிக்குப் பொதுச்சபையில் அனுமதி'' என்ற தலைப்பிலும் பிரசுரிக்கப்பட்ட செய்திகளில் பல பாரதூரமான தவறுகளும் திரிபுகளும் இடம்பெற்றுள்ளன. அச்செய்தியின் ஆரம்பத்தில் எமது இயக்கம் ஆயுதம் ஏந்தும் இயக்கமாக மாறும்வரை ஈழத்தமிழர்கள் தேர்தலை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தல் வேண்டும் என்று திரு அமிர்தலிங்கம் பேசியதாக வந்திருக்கும் செய்தி முற்றிலும் தவறானது. அவர் கூறியது திரித்துக் கூறப்பட்டிருக்கின்றது.

புரட்சிஇயக்கங்களாக ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலை இயக்கங்கள் தவிர ஏனைய இயக்கங்கள் தேர்தலில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாததென்று அவர் கூறினாரேயன்றி எமது இயக்கம் ஆயுதமேந்தும் இயக்கமாக மாறும்வரை என்று அவர் கூறவில்லை'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நிர்வாக அமைப்புச் செயலாளர் பண்டிதர் கா பொ இரத்தினம் 'ஈழநாடு'க்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இளைஞர் பேரவைபற்றி எழுந்துள்ள பிரச்னை குறித்து செயலாளர் நாயகம் எடுத்த நடவடிக்கைகளை அவர் விரிவாக விளக்கினார். இளைஞர் பேரவைசார்பில் பொதுச்சபையில் உறுப்பினராக இருக்கும் திரு செந்தூர்ராசா தமது நிலையை விளக்கினார் இன்னொரு உறுப்பினரான திரு. பரமசாமி, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜீப் வண்டிகளில் 3-3-79ல் நடந்த இளைஞர் பேரவை பொதுச்சபைக் கூட்டத்திற்கு உறுப்பினர்களை அழைத்துவந்ததாக கூறியபோது சபையில் பலத்த ஆட்சேபனை எழுந்தது. அவர் அக்கூற்றை வாபஸ்பெற வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வாபஸ்பெற்ற பின்னரே தொடர்ந்துபேச அனுமதிக்கப்பட்டார்.

அடுத்துப்பேசிய கல்முனை இளைஞர் பேரவை பொதுச்சபை உறுப்பினர் திரு பன்னீர்ச்செல்வம், கூட்டணியின் கட்டுப்பாட்டுக்கு அமைந்தே இளைஞர் பேரவை இயங்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினார், எந்தக் கட்டத்திலும் எவராவதுசெயலாளர் நாயகத்திற்குச் செயற்குழு கொடுத்த இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் பதவியை துஷ்பிரயோகம் செய்வதாகவோ அக்கூட்டத்தை நிராகரிக்கவேண்டுமென்றோ கூறவில்லை, அக்கூட்டம் ரத்துச்செய்யப்படுவதாக அவர் கூறியதாகவந்த செய்தி முழுத்தவறாகும், விவாதத்தின்முடிவில் செயற்குழு செயலாளர் நாயகத்திற்கு கொடுத்த அதிகாரப்படி இளைஞர் பேரவையை கட்டுபடுத்தி நடத்தவும் இளைஞர் பேரவை அமைப்பைப் பூரணப்படுத்தவும் செயலாளர் நாயகத்திற்கு பூரண அதிகாரம் வழங்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது, இளைஞர் பேரவை சார்பில் பொதுச்சபையில் இடம்பெற்ற உறுப்பினர்களில் ஒரு சிலர் மாத்திரம் தாம் எதிர்க்கவில்லை என்றும். ஆனல் ஆதரித்து வாக்களிக்கத் தாம் அனுமதி பெற வேண்டுமென்றும் கூறினர்.

''சந்ததியார் கோஷ்டிக்கும் பொதுச்சபையில் அனுமதி என்று வந்த செய்தியிலும் பொதுச்சபையிலுள்ள இளைஞர் பேரவை உறுப்பினர்களுக்கு கூட்டத்திற்கு அழைப்பு அனுப்பப்படவில்லை செய்தியும் தவறானதாகும். கூட்டத்தின் ஆரம்பத்திலேயே இக்கேள்வி கேட்கப்பட்டு எல்லோருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதாகவும் சிலருக்குக் கிடைக்கவில்லை என்று இளைஞர் பேரவை அறிக்கை வந்தபின்பும் நிர்வாகச் செயலாளர் அவர்களுடன் தொடர்புகொண்டு அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதைக்கூறி வருமாறு கேட்டுக்கொண்டாரென்றும் விளக்கப்பட்டது, இதைச்சபை ஏற்றுக்கொண்ட பின்பு வெளியில் நின்ற இளைஞர் பேரவையைச் சேர்ந்த பொதுச்சபை உறுப்பினர் சிலர் கூட்டத்தில் வந்து கலந்துகொண்டனர், அவர்களை அனுமதிக்கவேண்டுமென்று பொதுச்சபையினர் பலர் தலைமைப்பீடத்தை வலியுறுத்தியதாக வந்தசெய்தி உண்மையல்ல. மதிய உணவு இடைவேளைக்குப் பின் ஒற்றுமைக்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்தோடு திரு சந்ததியார் பேச அனுமதிக்கப்பட்டார், அவர் அளித்த விளக்கத்தைக் கேட்டபின் எவராவது முந்திய முடிவை மாற்ற விரும்புகிறீர்களா என்று தலைவர் கேட்ட பொழுது சபை ஏகமனதாக முந்திய முடிவையே ஊர்ஜிதம் செய்தது.'' [கொக-நிரு

# பொதுச்சபையில் நிறைவேறிய தீர்மானங்கள்

[யாழ்ப்பாணம்]

வவனியா நகரமண்டபத்தில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய தாயகத்தைத் திட்டமிட்டு பறிக்கும் நோக்கத்தின் ஒரு அங்கமாக வவனியா மாவட்டத்தில் சமனன்குளம் பிள்ளையார் ஆலயப்பகுதியை பௌத்த பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவும், மதவாச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 3 சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை வவனியாவோடு இணைத்து வவனியா மாவட்டத்தை சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசமாக்கவும், இராணுவ, விமானப் படைத் தளங்களை நிறுவி கைப்பற்றப்பட்ட பிரேதேசமாக வவனியாவை ஆட்சி செய்யவும் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளைக் கவனத்திலெடுத்து இந்நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி வவனியா மாவட்டம் தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசம் என்பதை ஏற்று இயங்கும்படி அரசாங்கத்தைக் கோருவதென்றும். அப்படி தமிழ் இன விரோத நடவடிக்கைகளை அரசு கைவிடாதுவிட்டால் இப்பிரதேசத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சாத்வீகமான முறையில் நேரடி நடவடிக்கைகளில் இறங்குவதென்றும் இதற்கான செயற்திட்டங்களை வகுத்து இயங்குவதற்கு வவனியாவில் ஓர் செயலகத்தை உடன் நிறுவுவதென்றும் தேவை ஏற்படின் நேரடி நடவடிக்கையில் இறங்குவதென்றும் தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தை திரு. ஐ. கேதீஸ்வரன் பிரேரிக்க திரு. வ. சிற்றம்பலம் ஆமோதித்தார். [கொ. நிரு.]

## ஆவரங்காலில் இன்று

# சமூகக்குறைபாடுகள் பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிராமப்பகுதியில் நிலவிவரும் சமூகக்குறைபாடுகள் சம்பந்தமாக ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையத்தின் ஆதரவில் நிலையமண்டபத்தில் இன்றுமாலை செவ்வாய் இரவு கலந்துரையாடல் நடைபெறவிருக்கிறது,

இக்கலந்துரையாடலில் கோப்பாய் எம் பி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கலந்துகொண்டு உரைநிகழ்த்துவார்.

ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையத்தைச் சேர்ந்த குழுவினர் கோப்பாய் எம் பியை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது. இப்பேச்சுவார்த்தையின்போது தங்கள் கிராம அபிவிருத்தி. சமூகக் குறைபாடுகள்பற்றி எம் பிக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கிராம அபிவிருத்தி பற்றி தெரிவிக்கப்பட்டபோது அப்பகுதி வீதிகளுக்கு மின்சார இணைப்பை உடனடியாக ஏற்படுத்தித்தருவதாகவும் பாடசாலைக்குக் கட்டிடநிதி அளிப்பதாகவும் விளையாட்டு மைதானம் ஒன்றினை நிறுவ ஆவன செய்வதாகவும் எம் பி உறுதியளித்தார்.

இச்சந்திப்பு நிலையத் தலைவர் திரு மு பரமசிங்காரம் தலைமையில் நடைபெற்றது, இக்குழுவினர் அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சமூகக் குறைபாடுகள் ஒழிப்புக் குழு பெரும்பாலும் வடபகுதியில் சாதிப்பாகுபாடுகள் தீர்க்கப்பட்டுவிட்டன என்ற பத்திரிகை அறிக்கையை வன்மையாகக் கண்டித்தனர்.

இன்றைய கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறுதிரு எஸ். கதிரவேலுப்பிள்ளை எம். பி. புத்தூர் பகுதியைச் சேர்ந்த சகல சமூகப் பிரமுகர்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து இக்கலந்துரையாடலில் சகலசமூகப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். கலந்துரையாடல் திரு மு. பரமசிங்கம்தலைமையில் நிகழும். [அ]

## 25 ஆயிரம்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

னர்,

இலங்கையின் தி· மு. க. முன்ணன் அமைப்பாளரும், இந்தியாவுக்கு நாடு திரும்பியவருமான திரு. மணவைத்தம்பி தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து திரு இராசதுரை விலகியதற்கு திரு ஆனந்தசங்கரியைச் சந்தித்து வருத்தம் தெரிவித்தார். சனிக்கிழமை நண்பகல் கச்சதீவின் மேற்குப் பக்கமாக கடை வீதிகளுக்கு அண்மையில் உள்ள பற்றைகளில் தி பரவியதால் சிறு பரபரப்பு ஏற்பட்டது. யாத்திரிகர்களின் உதவியுடன் பொலிசார் தீ பரவாமல் அணைத்தனர்

ஞாயிறு மாலை இந்தியாவில் இருந்து கச்சதீவு வந்த யாத்திரீகர்கள் கோஷ்டி ஒன்று சிறிய படகின் மூலம் கரை சேர முயன்றபோது சிறிய படகு கவிழ்ந்ததால் பல ஆயிரக்கணக்கான உடமைகளை பிரயாணிகள் தண்ணீரில் தவித்தனர் கரையில் நின்றவர்களும் பொலிசாரும் எடுத்த உடனடி நடவடிக்கையால் உயிர் சேதமின்றி சகலரும் மீட்கப்பட்டனர்.

திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு முன் சகல யாத்திரிகர்களும் கச்சதீவைவிட்டு வெளியேறி விடவேண்டுமென்று பொலிசாரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது கோவில் மூப்பர் திரு நஅன்ரனிப்பிள்ளை சமய சம்பிரதாய முறைப்படி கோவில் கொடியை உற்சவ ஆரம்பத்தின்போது ஏற்றிவைத்தார் இந்தியாவிலிருந்தும் மதகுருமார்கள் இம்முறை அதிகமாக வந்திருந்தனர் மின்சாரத்தால் அலங்கரிக்கப்பட்ட பட்டுக்குடைகள் சகிதம் புனித அந்தோனியார் சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது

புலவர் கே டபிள்யூ அரியநாயகம், திரு டி பென்சமின் ஆகியோர் கோவில் அறிவிப்பாளர்களாக கடந்த ஐந்து தினங்கள் கடமையாற்றினர் குறிகாட்டுவான் துறைமுகத்தில் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபரும் நெடுந்தீவு துறைமுகத்தில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் செந்தில் வடிவேலும் தொடர்ச்சியாக கடைமைகளில் ஈடுபட்டு துறைமுக நடவடிக்கைகளில் கவனமெடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது

# மலேசியா நடிகர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

தங்கமணி பிக்சர்ஸ் தயாரிக்கும் ''நெஞ்சுக்கு நீதி'' திரைப்படத்தில் நடிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த மலேஷியா நடிகர் சிவாஜிராஜா தனது படப்பிடிப்பு சம்பந்தமாக நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

இவரை அகில இலங்கை தமிழ் நாடகக் கலைஞர் பேரவை வரவேற்று பட்டமளித்து, கருத்தரங்கு ஒன்றையும் நாளை பிற்பகல் நடாத்த முடிவு செய்துள்ளது.

# நாளை கருத்தரங்கு

[சித்தன்கேணி]

மக்கள் விடுதலை முன்னணி வடபகுதி அமைப்பாளர் திரு. ஜி எஸ் பொன்சேகா நாளை புதன்கிழமை மாலை சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழக மன்றலில் நடைபெறும் கருத்தரங்கில் 'தமிழ்மக்கள் பிரச்னைகளும் அவற்றிற்கான தீர்வும்'' என்னும் பொருள் பற்றி கருத்துரை வழங்குவார். [இ]

தேவை

மேற்பார்வையாளரும் ஒரு Heavy Vechicle Driver (4 வருட அனுபவம்) இரண்டு Mechanics (4 வருட அனுபவம்) தேவை. வயது 19—35 வரை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். நேரம் காலை 9 தொடக்கம் மாலை 4-30 வரை. 635, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சிங்களப் பாடசாலைக்கு முன்பாக) 1895

கடல் பாசி மொத்தமாக சப்பிளை செய்பவர்கள் உடன் நேரில் கீழ்க்கண்ட முகவரியில் தொர்டபு கொள்ளவும். 635, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சிங்களப் பாடசாலைக்கு முன்பாக) 1895

# டியாகோகாஸியாவில் அமெரிக்கப் படைத்தளம்?

வாஷிங்டன், மார்ச் 12

இந்து சமுத்திரத்திலுள்ள டியாகோ காஸியா தீவில் அமெரிக்கா கடற்படைத்தளம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியகிழக்கு நாடுகளிலிருந்து எண்ணை ஏற்றிச்செல்லும் பாதைக்கு அருகிலேயே இக்கடற்படைத்தளம் அமைக்கப்படவுள்ளதாக தெரிகிறது.

அமெரிக்காவின் 5-வது கடற்படை பிரிவாக இக்கடற்படைத்தளம் இருக்கும் என அறிக்கப்பட்டது

சவூதி அரேபியாவில் உள்ள எண்ணைக்கிணறுகளைப் பாதுகாக்க அமெரிக்கா அவசியம் ஏற்பட்டால் போரில் இறங்கவும் தயங்காது என்று மேற்கண்ட தாவல்களைத் தெரிவித்த அமெரிக்க அதிகாரி தெரிவித்தார். [இ]

## மரண அறிவித்தல்

### திருமதி சு. தங்கம்மா

குப்பிழானைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சிவஞானரத்தினம் (இங்கிலாந்து) கமலாதேவி (ஆசிரியை, குப்பிழான் விக்னேஸ்வரா), விமலாதேவி(சட்டக்கல்லூரி). ஞானதேவி, ராணிதேவி, நந்தினி, சிவஞானசுந்தரம், சிவஞானசெல்வம் ஆகியோரின் தயாரும் க. பொ நடனசிகாமணி (மல்லாகம் ம வி )யின் மாமியாருமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று (13-03-79) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

1896 தகவல்: க. பொ. நடனசிகாமணி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News Paper in Sri Lanka.-